(2) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, தன்னார்வ சமூக சேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் செயல் பாடுகளுக்காகவும் தன்னார்வ சமூகசேவைகள் அமைப்பொன்றாக கருதப்பட வேண்டுமென்பதோடு, அந்த சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைப்படுத்தல் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) கொழும்பு மாவட்டத்தில் வாழும் பொதுமக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் அபிலாசைகளை மேலோங்கச்செய்து உயர்வாழ்வாதார தரமுடைய மக்களின் கூட்டத்தை உருவாக்குதல் ;

(ஆ) கொழும்பு மாவட்டத்தில் வாழும் இளைஞர் யுவதிகளின் கலைத்திறன்களையும், கலை அறிவையும் விருத்திசெய்ய வழிகாட்டல்களை வழங்குதல் ;

(இ) விசேடமாக கொழும்பு மாவட்டத்தில் வாழும் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்த, சித்தியடையாத 15-29 வயதிற்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பொருத்தமானதோர் செயல்திட்டத்தை உருவாக்குதல் ;

(ஈ) கொழும்பு மாவட்டத்தில் வாழும் இளைஞர், யுவதிகளின் பொதுவான முன்னேற்றம், பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் அபிலாசைகளை அபிவிருத்திசெய்ய அவசியமான மூலோபாயங்களை இனங்காணலும், அவற்றை இலக்காகக்கொண்டு செயற்படுதலும் ;

(உ) கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக அவற்றோடு தொடர்புடைய சகல அரச நிறுவனங்களின் சேவைகளையும் ஒருங்கிணைத்தல் மற்றும் அதற்கான திட்டங்களை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல் ;

(ஊ) கொழும்பு மாவட்டத்தில் வாழும் பொதுமக்களின் அபிவிருத்திக்குத் தேவையான மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை பயனுள்ள வேலைத்திட்டங்களாகக் கொண்டுநடாத்தி அவற்றைத் தொடர்ந்து கண்காணித்து இறுதி இலக்கை அடையச் செயற்படுத்தல் ;

(எ) கொழும்பு மாவட்டத்தில் வாழும் சகல இன மக்களினதும் சமூக, கலாச்சார, சமய விழுமியங்களின் முன்னேற்றத் திற்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் செயற்படுதல் ;

(ஏ) கொழும்பு மாவட்டத்தில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைக் கண்டறிந்து அவர்களின் அன்றாட வீட்டு வருமானத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தி அவற்றைச் செயற்படுத்துவதன்மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ;

(ஐ) கொழும்பு மாவட்டத்தில் வாழும் இளைஞர், யுவதிகளின் இணையப் பாவனையை நேர்வழிப்படுத்தும் வழிமுறை களை நடைமுறைப்படுத்தி சர்வதேச ரீதியில் போட்டி யிட்டு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் வளமானதோர் இளைஞர் சமுதாயத்தை உருவாக்குதல் ;

(ஒ) கொழும்பு மாவட்ட மக்களின் தொழில்முயற்சிகள் தொடர்பான திறன் மற்றும் ஆற்றல், தொழில்முயற்சி, தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவை களுக்காக மேற்கொள்ளும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சியை போன்றே வருமானம் ஈட்டக்கூடிய மற்றும் சுயதொழில் முயற்சிகளுக்கான எண்ணக்கருவை மேம்படுத்தல், அபிவிருத்தி செய்தல், போதித்தல் மற்றும் செயற்படுத்தல்.

3 ஆம் துணை விதியில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை செயற்படுத்தும்பொழுது, அந்த நோக்கங்கள் இனம், மதம், மொழி, குலம், ஆண், பெண், அரசியல் சித்தாந்தம், பிறந்த இடம் ஆகிய காரணங்களின் மீதோ அல்லது ஏதாவது காரணங்களின் மீதோ அடிப்படையாகக் கொண்ட வேறுபாடுகளுக்கு ஆட்படாது செயற்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் பொறுப்பாக இருக்கவேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனை கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல்.

**4**. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) இச்சட்டத்தின் விதிகளுக்கமைய இத்தாபனத்தின் முகாமையும் நிருவாகமும் அமைய வேண்டும். 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குனர்களை கொண்ட ஆளும் பேரவையொன்றினால் நிறைவேற்றப்படல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் சபை, 7 ஆம் பிரிவின் கீழான விதிகளினால் ஏற்பாடுகள் செய்யப்பட்ட முறையில் கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை நியமிக்கப்படும்வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படும்வரை கூட்டுத்தாபனத்தின் சபையாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(3) (அ) ஒருமுறை அதிகாரத்தை கொண்டிருந்த நிறைவேற்றதிகார சபை மீண்டுமொருமுறை நியமிக்கப்படுவதற்கு அல்லது கலைத்துவிட்டு புதிய செயற்பாட்டு கமிட்டியொன்றை நியமிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு கௌரவ ஆலோசகரின் அறிவுரையின்கீழ் தலைவர் பூரண அதிகாரத்தை கொண்டுள்ளார்.

(ஆ) ஒருமுறை அதிகாரத்தில் இருந்த நிர்வாக உறுப்பினர் மீண்டும் ஒருமுறை நியமனம் பெறுவதற்கு அல்லது இரத்துச் செய்யப்பட்டு புதிய நிர்வாக சபையை நியமித்துக்கொள்வதற்கு அல்லது மாற்றப்படுவதற்கு கௌரவ அனுசரணையாளரின் ஆலோசனைமீது தலைவருக்கு பூரண அதிகாரமுண்டு.

